# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 09.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 12918/SCIC/2022 & CP 2397/SCIC/2022**

| | | |
|---|---|---|
| திரு நாஞ்சில் C. மனோகரன் | | மேல்முறையீட்டாளர்-புகார்தாரர் |

/எதிர்/

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு. | --- | பொது அதிகார அமைப்பு |

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 10.05.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். 11.04.2022 அன்று மக்கள் குறைதீர்க்கும் முகாமில் மனுஎண்.146 நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் சம்மந்தப்பட்ட புகார் ஒன்று அளித்ததாகவும், அம்மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணை மற்றும் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை வழங்குமாறும் கோரியுள்ளார்.

2. மனுதாரர் 16.06.2022 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதனையடுத்து மனுதாரர் 19.07.2022 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது SA 12918/2022 ஆக பதிவு செய்துள்ளது. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. மேலும், மனுதாரர் 08.08.2022 தேதியிட்டு. மேல்முறையீட்டு அலுவலரால் தனக்கு இதுநாள்வரையிலும் தகவல்கள் வழங்கவில்லையென்று தெரிவித்து ஆணையத்திற்கு தனது புகார் மனுவினை அனுப்பியுள்ளார். அப்புகார் மனுவினைப் பெற்ற ஆணையம் CP 2397/2022ஆகப் பதிவு செய்துள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் புகார் மனு ஆகியவற்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் பொருட்டு 09.06.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு காஜா சாகுல் ஹமீது, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. மேற்சொன்ன இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் புகார் மனு இரண்டும் ஒரே 6(1)ன் கீழான மனுவின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அவை இரண்டும் இன்று ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான 10.05.2022 தேதியிட்ட மனுவானது 20.06.2022 அன்று தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி மனுவானது சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் தாம்பரம் வருவாய்கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் விவரம் 22.06.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் விசாரணையின்போது தெரிவித்தார். மனுதாரர் நெடுஞ்சாலைத்துறை தொடர்பான தனது 11.04.2022 தேதியிட்ட புகார் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் தனக்கு வழங்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார். அதுகுறித்த விவரம்

பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்படவில்லையென்பது தெளிவாகிறது.

5. மனுதாரர் 11.04.2022 தேதியிட்ட புகார் மனுவினை மக்கள் குறைதீர்க்கும் நாளில் நடைபெற்ற கூட்டத்தின் போது சமர்ப்பித்துள்ளதாகவும், அம்மனுவானது நெடுஞ்சாலைத்துறை சம்மந்தப்பட்ட மனு என்பதால், மேற்படி மனுவானது நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், அம்மனு குறித்து நெடுஞ்சாலைத்துறையின் கோட்டப்பொறியாளரால் 14.06.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். அதற்கு மனுதாரர் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தவாறு கடிதம் தனக்கு கிடைக்கப்பெற்றதாகவும், ஆனால் தனது புகார் மனுவின் மீது, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரம் தனக்கு வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்தார்.

6. ஆவணங்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் 14.06.2022 தேதியிட்டு சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம், கோட்டம்-2 சைதாப்பேட்டை கோட்டப்பொறியாளர் (நெ) என்பவரால் மனுதாரருக்கு பதில் அனுப்பப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் "**மேடவாக்கம் மேம்பாலப்பணிகளின் கடைக்கால் அமைக்கும் போது தோண்டப்பட்ட மண் பாலப்பணிகளுக்கு தேவையற்ற சவுடு மண் மற்றும் அணுகு சாலை அமைக்கும்போது தரம் குறைந்த நிராகரிக்கப்பட்ட மண் போன்ற கழிவு செய்யப்பட்ட மண், பணியாக்கத்தின் போது அவ்வப்போது ஒப்பந்ததாரரால் பணித்தளத்திலிருந்து அகற்றப்பட்டு வந்தது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள மண்ணும், தேவையற்றது என கழிவு செய்யப்பட்டு, அருகாமையில் இருந்த காலியிடத்தில் பால ஒப்பந்ததாரரால் கொட்டி வைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள இம்மண் நெடுஞ்சாலைத்துறையினால் வேறு பணிகளுக்காக சேகரிக்கப்பட்ட மண் அல்ல. இவையனைத்தும் தேவையற்றது என கழிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரருக்கு சொந்தமான மண் ஆகும். ஒப்பந்த உடன்படிக்கையின்படி ஒப்பந்ததாரரால் அப்புறப்படுத்த வேண்டிய மண் என்பதால் இம்மண் சம்மந்தமாக நெடுஞ்சாலைத்துறைக்கு எந்த உரிமையும் இல்லையென தெரிவித்துக்கொள்ளப்படுகிறது**" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அப்புகார் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

7. மேலும், மனுதாரர் 11.04.2022 தேதியிட்ட அவரது புகார் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை அவருக்கு

வழங்கப்படவில்லையென்பதையே அவரது முக்கிய கோரிக்கையாக ஆணையத்தின் முன் விசாரணையின்போது தெரிவித்தார். **எனவே, கோட்டப்பொறியாளர் (நெ), சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம், கோட்டம்-2, சைதாப்பேட்டை, சென்னை அவர்கள் மனுதாரரின் புகார் மனு குறித்து ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதன் விவரம் அல்லது எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென்றாலும் அதுகுறித்து விவரத்தினையும் 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன், மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையினை ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு மேற்படி அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேற்படி ஆணையத்தின் உத்தரவினை பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்கள் கோட்டப்பொறியாளர் (நெ), சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம், கோட்டம்-2, சைதாப்பேட்டை, சென்னை அவர்களுக்கு தெரிவிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட உத்தரவுகளுடன், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

7. மனுதாரரின் புகார் மனுவினைப் பொறுத்தவரையில், மனுதாரரின் இப்புகார் மனுவிற்கான அதே சட்டப்பிரிவு 6(1)ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது இன்று ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் கோரிய தகவல்கள் வழங்குமாறு ஆணையத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, முற்றாக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில், **இந்த புகார் மனுவின் மீதான விசாரணையும் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 12918/SCIC/2022 & CP 2397/SCIC/2022</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
செங்கல்பட்டு.

கோட்டப்பொறியாளர் (நெ),
சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்,
கோட்டம்-2, சைதாப்பேட்டை,
சென்னை 600 018

**<u>மனுதாரர்:-</u>**

திரு நாஞ்சில் C மனோகரன்,
எண்.11, சாந்தி நகர் 1 வது குறுக்குத்தெரு,
கௌரிவாக்கம்,
சென்னை 600 073

Copy to: File TK/PS